மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முயற்சி என்பது பச்சை மட்டையை பற்ற வைக்கின்ற முயற்சி. அது பலிக்காது என்பதைச் சொல்லி நன்றி கூறி விடைபெறுகிறேன்.

6. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்கள் (Panel of Chairmen) ஆக நியமிக்கின்றேன்.

1) திரு. அ. பாப்பா சுந்தரம்

2) திரு. ஓ.கே. சின்னராஜ்

3) திரு. கே.பி. அன்பழகன்

4) திரு. ஆர். சின்னசாமி

5) திரு. பி.ஜி. நாராயணன்

6) முனைவர் செ.கு. தமிழரசன்

7. இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2014–2015, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடுகள், மொத்தம் 1,751.18 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

@ 148 முதல் 151 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.